தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள்,சென்னை–6
முன்னிலை முனைவர் வி.சி.இராமேஸ்வரமுருகன்
ந.க.எண்.00102/கே/இ3/2018, நாள்.19.04.2019

பொருள்: பள்ளிக்கல்வி– 10,11 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள் – முதல் மூன்று இடங்களை பெறும் மாணவர்களின் தரம் (Rank) அறிவிக்கும் நடைமுறை 2016–17 ஆம் ஆண்டு முதல் கைவிடப்பட்டது– அரசாணையை செயல்படுத்துதல்– தொடர்பாக.

பார்வை: அரசாணை (நிலை) எண்.91, பள்ளிக்கல்வி (அ.தே)த்துறை, நாள். 11.05.2017

*************

பார்வையில் கண்ட அரசாணையின் படி, முதன்மைக்கல்வி அலுவலர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது. அந்த அரசாணையின் பத்தி 6–ல் " ............ உயர்மட்டக்குழுவின் ஆலோசனையின் அடிப்படையிலும் பெற்றோர்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து அவ்வப்போது அரசுக்கு கொண்டு வரப்பட்ட புகார்களின் அடிப்படையிலும் மாணவர்களுக்கு ஏற்படும் அதீத மன அழுத்தங்களை குறைக்கும் வகையிலும் ஆரோக்கியமற்ற போட்டி சூழல்களை தவிர்க்கும் வகையிலும் நடப்பு 2016–17 ஆம் கல்விஆண்டு முதல் 10 , 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில மற்றும் மாவட்ட முதல் மூன்று இடங்களை அறிவிக்கும் நடைமுறையை கைவிடலாம் என கருதி அரசு அவ்வாறே ஆணையிடுகிறது........" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணையில் கூறப்பட்டுள்ள விவரங்களை அனைத்து வகையான பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கும் அறிவுரையாக வழங்கி அரசாணையை செயல்படுத்துமாறு முதன்மைக்கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மாணவர்களின் மன அழுத்தத்தை குறைக்கும் வகையிலும் ஆரோக்கியமற்ற போட்டி சூழலை தவிர்க்கும் வகையிலும் வெளியிடப்பட்ட அரசாணையின் நோக்கத்திற்கு மாறுபட்ட வகையில் ஒரு சில மாணவர்களின் பெயர் மற்றும் ஒளிப்படம் (Photo) தாங்கிய விளம்கர பிரசுரங்களை வெளியிடுதல் , பதாகைகள் அமைத்தல், நாளிதழ் மற்றும் ஊடகங்களில் விளம்பர படுத்துதல் போன்ற செயல்பாடுகளை மாணவர்களின் நலன் கருதி தவிர்க்க அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் , நிர்வாகிகளுக்கும் தக்க அறிவுரைகள் வழங்கிட முதன்மைக்கல்விஅலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அரசாணையின் படி, செயல்படாத பள்ளிகள் மீது விதிகளின் படி , நடவடிக்கை மேற்கொள்ளவும் முதன்மைக்கல்விஅலுவலர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

முதன்மைக்கல்வி அலுவலர்கள் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரத்தினை பள்ளிக்கல்வி இயக்ககத்திற்கு அறிக்கையாக சமர்பிக்க வேண்டும்.

ஓம்/– வி.சி.இராமேஸ்வரமுருகன்.
பள்ளிக்கல்விஇயக்குநர்

பெறுநர்

அனைத்து முதன்மைக்ககல்வி அலுவலர்கள்

நகல்

1. அரசு முதன்மைச் செயலாளர்,
   பள்ளிக்கல்வித்துறை,
   தலைமைச் செயலகம்,
   சென்னை–9 – அவர்களுக்கு பணிந்து அனுப்பலாகிறது.
2. மெட்ரிக் பள்ளி இயக்குநர் அவர்களுக்கு கனிவுடன்அனுப்பப்படுகிறது.
3. அரசு தேர்வுத்துறை இயக்குநர் அவர்களுக்கு கனிவுடன்அனுப்பப்படுகிறது.